# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

**காவலன்**

சந்தாதாரரின் கவனத்திற்கு

| | | |
|---|---|---|
| வருட | சந்தா ரூபா | 9-00 |
| 6 மாத | ,, ,, | 4-50 |
| 3 மாத | ,, ,, | 2-25 |

(தபாற் செலவு உட்பட)

95-ம் புத். | 1970-ம் ஆண்டு வைகாசி மாதம் 2-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 16-ம் இல.


## அப்பொல்லோ (13) வீரர்

சந்திரனுக்கு மீளவும் ஒருமுறை மனிதனை இறக்கும் பிரயத்தனத்தில் ஏற்பட்ட ஏதோ தவறினால் 13-ம் அப்பொல்லோ விண்வெளிக்கப்பல் வீரர்கள் மூவருடைய உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டிருந்தசமையத்தில் உலகமக்கள் யாவரும் செபத்தில் ஒன்றுசேர்ந்து அவர்களுடைய சேமத்துக்காகப் பிரார்த்தித்துக் கொண்டனர்—வீரர்களின் உயிரைக் காப்பாற்றுவதில் பங்குபெற சோவியத்ருஷியாவும் தயாராக இருந்தது மகிழ்ச்சிக்குரியதே. விண்வெளிக் கப்பலின் கோளாறு ஏற்பட்டதை அறிந்த பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் வீரர்களின் சேமத்துக்காக தானும் செபித்துக்கொண்டது மாத்திரமல்லாது உலக மக்கள் யாவரையும் செபித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். ஆபத்து நீங்கி வீரர்கள் சேமமாய் பூமிக்குமீண்டதன்பின் பரிசுத்த தந்தை தனது மகிழ்ச்சியை அமெரிக்கதேச ஜனாதிபதிக்கு அறிவித்துக் கொண்டார்.

## பரி. தந்தையின் சாடீனியா விஜயம்

பரிசுத்ததந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் வத்திக்கானைவிட்டு இத்தாலியின் பலபாகங்களுக்கும் இடையிடையே விஜயம் செய்வது சகஜமாகிவிட்டது. ஆனால், இவருக்கு முந்தியிருந்த பாப்பரசர் எல்லோரும் பலநூற்றாண்டுகாலமாக ரோமாபுரியை விட்டு பிறபகுதிகளுக்குச் சென்றதில்லை. சென்ற வாரம் இத்தாலி தேசத்துக்கு அருகாமையிலுள்ள சாடீனியா தீவுகளுக்குச் சென்று அங்குள்ள மாதா கோவில் மகோற்சவத்தில் பங்குகொண்டு, மேற்றிராணிமார் சபையினரின் ஆலோசனையிற் பங்குபெற்று மேலும் வறியவர் சேரி, வியாதிஸ்தர்நிலையம் முதலியனவற்றுக்கும் சென்று அன்று மாலையே வத்திக்கானுக்கு மீளவும் வந்துவிட்டார்.

## பிரான்சிலே தியாக்கோன்மார்

சென்ற உயிர்த்த ஞாயிறன்று பிரான்சு தேசத்திலுள்ள லேயோன்ஸ், டிஜோன், கறிசோன் மேற்றிராசனங்களில் தேவதொண்டு புரிவதற்காக சில பொதுநிலையினருக்குத் தியாக்கோன்பட்டம் கொடுக்கப்பட்டது.

ஆதித் திருச்சபையிலே தியாக்கோன்மார் இருந்தார்கள், இவர்களுக்கு, ஞானஸ்நானம் கொடுக்கவும், ஏழைகள், வியாதிக்காரரைப் பார்க்கவும், திருப்பலியில் சுவிசேஷம் வாசிக்கவும், தேவநற்கருணை கொடுக்கவும் அதிகாரம் இருந்தது. புதிய தியாக்கோன்மாரும் இதே பணிகளைப்புரிவார்கள். இவர்களின் உதவி பயனுள்ளதாக இருந்தால் காலகதியில் பிரான்சிலுள்ள மற்ற மேற்றிராசனங்களுக்கும் தியாக்கோன்மார் நியமிக்கப்படுவார்கள்.

## உலக கிறீஸ்தவசபை ஸ்தாபனத்துடன் கத். திருச்சபையும் சேருமா?

உலக கிறிஸ்தவ சபைகளின் ஸ்தாபனம் ஐரோப்பாவில் ஜெனிவாநகரத்தில் தலைமைக்காரியாலயத்துடன் அரும்பெரும் தொண்டுகள் செய்துவருகின்றது. கத்தோலிக்க திருச்சபையும் அதன் மறு அங்கத்தினர் போல், அந்த ஸ்தாபனத்தில் பங்குபற்ற வேண்டுமென்று பலர் விரும்புகிறார்கள். இது சாத்தியமாகுமா என்பது பற்றி திருச்சபை அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர். சிலவகைகளில் கஷ்டமான கருமமாகவே இருக்கின்றது. கொள்கையளவில் வேறுபட்ட கிறிஸ்தவ சபைகளுடன் எவ்வகையில் சேர்ந்து இயங்கலாம் என்பதே பிரதானமான யோசனை. மதக்கோட்பாடுகளைக் கவர்ந்த சமூகவேலைகள் முதலியனவற்றுக்காக உழைக்கும் கருமத்தில் சகல சபைகளும் ஒன்றுசேர்வதுஉசிதமாகவே தோன்றுகின்றதுது.

## தனியார் பாடசாலைகள்

சென்றவாரம் மாத்தளை புனித அக்கினேசம்மாள் மடப்பாடசாலை பரிசளிப்புவிழாவில் தலைமைதாங்கிய கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் பாடசாலை அதிபர் வண. எயிடான் சுவாமியார் ஆற்றியபேருரையில் தனியார் பாடசாலைகளின் தன்மையை எடுத்துவிளக்கிக் காட்டினார். இப்பாடசாலைகளை "சலுகைகள் நிறைந்தஸ்தாபனங்கள்" எனக் குறை கூறுகிறவர்களும் உளர் என்றார். ஆனால், இப்பாடசாலைகளில் நிறைந்துள்ள சலுகைகள் சுயநலம்கருதாத சேவையே என்றும் இச்சேவைகளைப்பெற கத்தோலிக்கரல்லாத நூற்றுக்கணக்கானோரும் வருடாவருடம் முயன்று அவற்றைப்பெற முடியாதவர்களாய் போவது வருந்தத்தக்கதே என்றும் கூறி அப்பாடசாலையில் தொண்டாற்றும் கன்னியர்களினதும் ஆசிரியைமாரினதும் சேவையையும் பெரிதாகப் புகழ்ந்து பேசினார்.

## பாடகர் மகாநாட்டில் பாப்புவின் உபதேசம்

இம்மாதம் 6-ந் திகதி இத்தாலிதேசத்திலுள்ள லொறெற்றோ என்னும் இடத்தில் நடந்த சர்வதேச கத்தோலிக்க பாடகர்குழு மகாநாட்டில் பரிசுத்த தந்தை 6-வது பின்னப்பர் பங்குபெற்று ஆற்றிய சொற்பொழிவில் "பாடுங்கள் பிள்ளைகள் பாடுங்கள், நன்றாய்ப் பாடி கடவுளைப் போற்றுங்கள்" என்று கூறி உற்சாகப்படுத்தினார். மேலும் அவர் கூறியதாவது: "இப்புது சகாப்தத்தில் பாடல் சம்பந்தப்பட்ட பலவகை வேலைகளுக்கும் அளவிறந்த சந்தர்ப்பங்கள் உண்டு; இக்காலத்துக்கு ஏற்ற புதியமுறைகளில் பாடல்களை இயற்றலாம். உகந்தசங்கீத வாத்தியங்களை உபயோகிக்கலாம். எல்லாவற்றையும் சீர்ப்படுத்தித் தேவனைப் போற்ற இன்றுள்ள தருணங்களை வழுவ விடாது முயலவேண்டும்" என்றார். உலகத்திலே இன்று இளைஞர் மத்தியில் சகல விஷயங்களிலும் தோன்றியிருக்கும் புதிய உற்சாகம் திருப்பாடல்களிலும் பிரதிபலிக்கவேண்டுமென்றும் பாப்பரசர் கேட்டுக்கொண்டார்.

## அல்போன்சா சகோதரிக்குப் புனிதர் பட்டம் எப்போது?

அல்போன்சா சகோதரிக்குப் புனிதர் பட்டம் கொடுக்கலாமா என்பது பற்றிய ஆய்வில் முதற்கட்டம் முற்றுப்பெற்றுவிட்டது. சகோதரியின் கடிதங்களை ஆராய்ந்த மறையியல் குழுவின் அறிக்கையை வத்திக்கான் ஏற்றுக்கொண்டு விட்டது. அடுத்தக் கட்டத்தைத் தொடங்கக் குழுவிற்கு பாப்பரசர் அனுமதியளித்துவிட்டார். இனி சகோதரியின் புனிதப் பண்புகளைப் பற்றிய ஆராய்ச்சியின் முடிவைப் பாப்பரசர் பரிசீலிப்பார்.

## "ரொடீசியா மேற்றிராணிமாரைச் சந்திக்கத் தயார்" — அயன் சிமித்

ரொடீசியாவில் அண்மையில் இயற்றப்பட்ட அநீதியான பல சட்டங்களில் நிலஉரிமைச் சட்டமும் ஒன்று. இச்சட்டத்தின் பயனாக அப்பிரதேசம் நிறத்தவர் பகுதி வெள்ளையர்பகுதி எனப் பிரிக்கப்படுகிறது. வெள்ளையர் பகுதியில் நிறத்தவர், ஊழியவேலைகளுக்கன்றி பிறநேரங்களில் எட்டியும் பார்க்கமுடியாது. வெள்ளையருக்குப் பிறிதான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வைத்தியசாலைகள், கல்லூரிகள் முதலியன பிறிதானவை. கோவில்களும் பிறிதானவையே. வெள்ளையருக்குப் பிறிதான வெள்ளைநிறக்குருமார் தொண்டுசெய்ய வேண்டுமாம். இச்சட்டங்களின் நீதியற்றதன்மையைச் சென்றவாரம் அப்பிரதேச கத்தோலிக்க மேற்றிராணிமார் கண்டித்து நிருபம் ஒன்று வரைந்திருந்தனர். சட்டத்தை எதிர்ப்பதாகவும் கூறியிருந்தனர். இதைக் கேள்வியுற்ற தலைவர் அயன் சிமித் தாம் மேற்றிராணிமாரைச் சந்தித்து இச்சட்டத்தைப்பற்றிய விளக்கங்களைக் கொடுக்கத் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கிறார்.

● இங்கிலாந்திலே லான்செஸ்டரைச்சேர்ந்த பதினொரு அங்கிளிக்கன்சபைப் பாதிரிமார் அங்குள்ள கத்தோலிக்க ஆசிரமமொன்றில் அண்மையிலே ஐந்துநாள் ஞானவொடுக்கமொன்று செய்துமுடித்திருக்கிறார்கள்.

## கொல்லப்பட்ட மேற்கு ஜேர்மனி அரச தூதுவர் ஸ்பிறேற்றுக்காகப் பாடற்பூசை

குவாட்டமாலாதேசத்தில் கொள்ளைக்காரர் கையில் அகப்பட்டு கொலைசெய்யப்பட்ட மேற்குஜேர்மனி அரசதூதுவ கலாநிதி கார்ள் ஸ்பிறெற்றி என்பவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக அவரது பட்டணமாகிய லான்ட்சற் என்னும் இடத்தில் துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஸ்பிறெற்றி அவர்கள் குவாட்டமாலா கொள்ளைக்காரர்கையிற் சிக்குப்பட்டபோது அவர்கள் தமது தேச தலைவர்களுக்கு தமது கொள்ளைக்கூட்டத்துக்குச் சேர்ந்த சிலரை மறியலில் இருந்துவிடுதலைசெய்யுமாறு நிபந்தனை விடுத்தனர். அந்நிபந்தனையை அத்தேசத் தலைவர்கள் நிறைவேற்ற முன்வராததால் ஸ்பிறெற்றி அவர்களைக் கொலைசெய்து அவரது சடலத்தை வீதியில் வீசிவிட்டனர். அவரது பிரேதம் மேற்கு ஜேர்மனிக்குக் கொண்டுசெல்லப்பட்டு அரசமரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை

ஆங்கில மூலம்: மறைத்திரு. சைமன் இறகோரி பெரோா, யே. ச.
தமிழாக்கம்: நெடுந்தீவு, ம. மரியதாசன்.

( சென்றவாரத் தொடர்ச்சி )

குருவானவரொருவர், இயாக்கோனொருவர் உட்பட பார்சியக் கிறீஸ்தவர்கள் 6-ம் நூற்றாண்டில் அனுராதபுரத்தில் தற்காலிகமாக வசித்தனரென்பது உண்மையானதோர் விடயமாகும். இப்பார்சியத் திருச்சபையானது அந்நியர்களுக்காக அந்நிய முறையில் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த நாட்டிலுள்ள மக்களுக்கு சுவிசேஷத்தைப் போதிப்பதற்கு முயற்சியெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பத்துநூற்றாண்டுகள் கடந்த பின்னர் அதாவது வாஸ்கொடகாமா கடல்வழியைக் கண்டுபிடித்து எட்டு ஆண்டுகள் சென்றபின்னரே முதல்முதலாக எதிர்பாராத விதமாக சுவிசேஷகபோதகர்கள் இலங்கைக்கு வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இவர்களின் வருகையிலிருந்து முதல் நாற்பது ஆண்டுகள் வரைக்கும் போர்த்துகேய கிறீஸ்தவர்களின் ஆன்மீகப் பணிகளைப் படைவீரர்கள் மத்தியில் பணியாற்றிவந்த குருக்களே கவனித்து வந்தனர். இவர்கள் பிறசமயத்தவர்கள் சிலரையும் மதமாற்றம் செய்தனர். ஆனால் சுவிசேஷ போதனை நடத்துவதற்கு நல்ல முறையில் அமைக்கப்பட்ட வேதபோதக சபையெதுவும் இங்கிருக்கவில்லை. கோட்டை இராச்சியமன்னனின் அழைப்பின்பேரில் பிரான்சிஸ்கன் சபைக் குருமார் இலங்கைக்கு வந்தனர். இலங்கைக்கு முதன்முதலாக வந்துசேர்ந்த மிசனரிகள் இவர்களேயாவார்கள். நிறைந்த விருப்பத்தோடு நேர்மையான முறையில் மன்னன் இந்த அழைப்பை விடுக்காமல், போர்த்துக்கீசர்களின் உதவியைப் பெறவேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு ஒரு பொய்யான நம்பிக்கையை ஏற்படுத்தி அவர்களுக்கு அழைப்பு விடுத்தபடியினால் இவனது கோரிக்கைக்கு இணங்கி இங்குவந்த குருமார் ஆரம்பத்தில் தாங்கொணாக் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியவர்களாயிருந்தனர். தனது குடிமக்கள் கிறீஸ்தவ மதத்தைத் தழுவுவது மன்னனுக்கு எவ்விதத்திலும் விருப்பமில்லாதிருந்தது. கிறீஸ்தவ மதத்தைத் தழுவியவர்களை இவன் துன்புறுத்தியும் வந்தான். அக்காலத்தில் கிறீஸ்தவ மதத்தைத் தழுவினால் சகிக்கமுடியாத வேதனைகளை அனுபவிக்க வேண்டி வருமென்பதையும் மக்கள் அறிந்திருந்தனர். கிறீஸ்தவ மதத்திற்கு எதிர்மாறான கருத்துக்களைக் கொண்ட பௌத்த சமயச்சிந்தனைகளில் பலநூற்றாண்டுகளாகப் பழக்கப்பட்ட ஒருமொழியில் கிறீஸ்துவ தத்துவங்களையும் சிந்தனைகளையும் எண்ணங்களையும் விளக்கிக் கூறுவதென்றால் முடியாததோர் காரியமாகவே இருந்தது. கடவுள், ஆன்மா, விண்ணகம், நரகம், பாவம், இரக்கம், மீட்பு போன்றவற்றை எடுத்துக்கூறி அதனைக் கிறீஸ்துவ முறைக்கேற்ப சிங்களமொழியில் சிந்திக்க வைப்பதற்கு அம்மொழியில் ஆழ்ந்தபுலமையும், அதனை மரபிற்கேற்ற முறையில் பயன்படுத்தத் தெரிவதும் அவசியமாயிருந்தன.

மாறுபட்ட பழக்கவழக்கங்கள், நன்றாக முற்றிய அரசியல் நெருக்கடிகள், தவறான எண்ணங்கள், போர்த்துகேயரின் துர்நடத்தைகள் என்பன வேதபோதக வேலைக்குக் குந்தகம் விளைவித்து வந்தன. மன்னர் வெளியரங்கமாக ஆதரவளித்தாராயினும் உள்ளத்தில் நிறைந்த வெறுப்புக் கொண்டிருந்தார். எவருமே குறைகூற முடியாத விடயங்களென நம்பப்பட்டுவந்த கர்மம், மறுபிறப்பு, முக்திநிலைபோன்ற கீழைத்தேய சமய சித்தாந்தங்களில் ஊறித்திளைத்த மக்களுக்கு முற்றிலும் மாறுபட்ட வாழ்க்கைமுறையைக்கொண்டதோர் புதிய மதத்தைப்பற்றிப் புரியவைப்பதென்றால் அது முடியாத காரியமாகவே இருந்தது. சந்தர்ப்ப சூழ்நிலைகள் பாதகமாக விருந்தபடியினால் சுவிசேஷ போதகம் என்றவித்து முளைவிடக்கூடிய சாத்தியக்கூறுகள் இலங்கையில் தென்படவில்லை. எனினும் இப்படிப்பட்ட காரணங்களினால் மனச்சோர்வடைந்த மிஷனரிகளை நாமெப்போதாவது கண்டதுண்டா? வெற்றிக்குரிய சிறிய சந்தர்ப்பம் கிடைத்தாலும் அதனை நல்ல முறையில் பயன்படுத்திய குருமார்கள், மொழிபெயர்ப்பாளர்களின் துணைகொண்டு மிகத் துணிவான முறையில் பகிரங்கமான இடங்களில் சுவிசேஷ போதகம் செய்ததுமன்றி நாட்டிலுள்ள அறிஞர்களோடு வாதப்பிரதிவாதங்கள் நடாத்தி அவர்களின் திருப்திக் கேற்றவிதமாக அவர்களை நம்பச்செய்து அவர்களிற் சிலரை உண்மையான கிறீஸ்தவர்களாக மாற்றினர்.

நாட்டில் முதன்முதலாக வேதபோதக அலுவல் ஆரம்பமானதும் இறையருளும் துணைபுரியத் தொடங்கியது. இறைவனால் தூண்டப்பட்ட மன்னார் மக்கள் தென்னிந்தியாவில் தமது உறவினர்கள் மத்தியில் வேதம் போதித்துப் புதுமைகள் புரிந்துவந்த புனித பிரான்சிஸ் சவேரியாரைப்பற்றிக் கேள்வியுற்றுத் தங்களுக்கும் வந்து வேதம் போதிக்குமாறு அப்புனிதருக்கு அழைப்பு விடுத்தனர். அவர் திருவாங்கூரில் அவசர அலுவலில் ஈடுபட்டிருந்தபடியினால், வேறொரு மிஷனரியை மன்னாருக்கு அனுப்பிவைத்தார். இந்தியரான இந்த மிஷனரி தனது வேதபோதக திறமையினால் மக்களை மனந்திருப்பி மன்னார் தீவிலுள்ள மக்களனைவருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார். இதனைக் கேள்வியுற்ற யாழ்ப்பாண மன்னன் வெஞ்சினங்கொண்டு வேங்கையெனச்சீறி கிறிஸ்தவ மதத்தைக் கைவிட மறுத்த ஆண்கள் பெண்கள் பிள்ளைகளுட்படச் சுமார் 700 பேரைத் தனது வாளுக் கிரையாக்கினான்.

வேதசாட்சிகளின் இரத்தத்தை வித்தாகக் கொண்டுள்ள திருச்சபையைக் கோரக் கொலைகள் புரிந்து நிர்மூலமாக்குவதற்குத் திட்டம்தீட்டினால் அது பகற்கனவாகவே முடியும். திருச்சபைச் சரித்திரத்தை நிரூபிப்பதற்கு இதுவொன்றே போதுமானதாகும். இப்போதுங்கூட இச்செயல் நிரூபிக்கப்பட்டேயிருக்கிறது. மன்னார் தொடக்கம் தொந்தாவரைக்குமுள்ள தென்மேற்குக் கரையைச் சேர்ந்த சுமார் எழுபதினாயிரம் மக்கள் மன்னார் வேதசாட்சிகளைக்கண்டு மனோதைரியங்கொண்டு கிறீஸ்தவ மதத்தைத் தழுவவேண்டுமென்ற ஆசையினால் உந்தப்பட்டு, 'அந்நாளும் வந்திடாதோ' என்றவாறாக ஞானஸ்நானம் பெறும் நன்னாளை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். கோட்டை இராச்சியத்தை ஆண்டுவந்த வாலிபப் பராயமுடைய மன்னனுக்கு இளம்பராயத்திலிருந்தே கிறிஸ்தவ மதக்கல்வி புகட்டப்பட்டு வந்தபோதிலும் இவன் திடீரெனச் சிம்மாசனமேறிய படியினால் போர்த்துக்கேயர்கள் விடுத்த வேண்டுகோள்கள் யாவையும் அரசியல் காரணங்களுக்காக நிராகரித்து வந்தான். இத்தகைய மன்னன்கூட, கிறீஸ்தவ மதத்தைத் தழுவவேண்டுமெனத் தனது மக்கள் காட்டிய உற்சாகத்தினால் தூண்டப்பெற்றவனாகிச் சொந்த விருப்பத்தின்பேரில் தனதுபரிவாரங்களோடுகூட கிறீஸ்தவ மதத்தைத் தழுவினான். ஏனைய பிரமுகர்கள்யாவரும் இவனது வழியைப் பின்பற்றினர். இவ்வாறாகப் 16-ம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபை ஆரம்பமாயிற்று.

திருச்சபையின் வளர்ச்சி அன்றே ஆரம்பமாகத் தொடங்கியது. மதமாற்றத்தினால் வெறுப்புக்கொண்ட அநேக மக்கள் இம்மன்னனைக் கைவிட்டுச் சீதவாக்கையை ஆண்டுவந்த அரசனை நாடிச்சென்று அவனது கையை வலுப்படுத்தியதுமல்லாமல், போர்த்துக்கேயர்களினதும் கிறீஸ்தவர்களினதும தயவில் வாழவேண்டிய நிலைக்கு இம்மன்னனை ஆளாக்கினர். இதனால் கோட்டை இராச்சியம் சிதைவுறத் தொடங்கினாலும் கிறீஸ்தவமதம் மென்மேலும் வளரத் தொடங்கியது.

மன்னன் காட்டிய ஆர்வம், குருமாரின் சுறுசுறுப்பு, போர்த்துக்கேயர்களின் உதவி ஆகியன கோட்டை இராச்சியமக்கள் கிறீஸ்தவமதத்தைத் தழுவுவதற்கு உறுதுணை புரிந்தன. கிறீஸ்தவ மதபோதனைக்கு ஒழுங்குசெய்து கொடுப்பதன் மூலம்போர்த்துக்கேயர்களின் உதவியைப் பெறலாமெனக் கருதிய கண்டிய மன்னனின் இராச்சியத்திலும் கத்தோலிக்க மிஷனரிகள் கால்வைத்தனர். தங்கள் உதவியை நாடிய இராசகுமாரர்களுக்குப் போர்த்துக்கீசர்கள் ஆக்கபூர்வமான உதவியளிக்க முடியாது போனமையினாலும், மற்றும் அரசியற் கலகங்களினாலும் அக்காலத்தில் கண்டிய இராச்சியத்தில் திருச்சபை வேரூன்றுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படவில்லை. எனினும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்ற படியினாற்றான் மலையக மக்களும் கிறிஸ்தவ மதத்தைப்பற்றி அறிந்துகொள்ளலாயினர்.

(வளரும்)

# விண்ணுலக அரசியே மனங்களிகூரும் அல்லேலூயா

(பிபியானு பத்திநாதர் — அளவெட்டி)

யேசுநாதர் தம் உயிர்ப்புக்குப்பின்பு அளித்த பற்பல காட்சிகளைப்பற்றி சுவிசேஷங்களில் படிக்கிறோம். ஆனால் அவர் தம் அன்புத் தாயாகிய மரியம்மாளுக்கு அளித்த காட்சியைப்பற்றி வேதாகமம் தகவல் எதுவும் தருவதில்லை. ஆனால் யேசுநாதர் உயிர்த்த பின்பு முதன்முதல் மரியம்மாளுக்குக் காட்சி அளித்தாரென்பதே திருச்சபையில் தொன்றுதொட்டு வழங்கிவரும் நம்பிக்கையாகும். மரியாளைப்போல் யேசுவுடன் நெருங்கி ஒன்றுபட்டிருந்தவர்கள் வேறு யாருமிலர். அவரை ஈன்றெடுத்து அன்புடன் வளர்த்து மறைவு வாழ்விலும் பகிரங்க வாழ்விலும் அவரோடு இருந்து அவரது துன்பங்களில் மிகப்பெரும் பங்குபெற்று கல்லறைவரையிலும் அவரைப் பின்சென்ற தாய்க்குஅன்றி வேறு யாருக்கு அவர் முதன்முதல் காட்சி அளிக்கமுடியும்? பாடுகளின் நாட்களில் அவள் அனுபவித்த சொல்லரிய மனத்துயரங்களுக்கு ஈடுசெய்யப்படவேண்டியிருந்தது; துயரத்தின் வாளால் ஊடுருவப்பட்ட அந்த உள்ளம் ஆறுதல் அடைய வேண்டியிருந்தது; யேசுவுடன் துன்பத்தின் ஆழத்தில் இறங்கியவள் அவருடன் மாட்சியின் உச்சியிலும் ஏறவேண்டியிருந்தது. எனவே உயிர்த்த யேசுநாதர் முதன்முதல் தமது தாய்க்குக் காட்சி அளித்தாரென்று திருச்சபை வழங்கிவரும் நம்பிக்கை மிகப் பொருத்தமானது.

பாஸ்கு ஞாயிறன்று அதிகாலையில் பரிசுத்த கன்னி மரியம்மாள் தன் அறையில் தன் திருமகனைத் தியானித்து அமர்ந்திருந்தாள். அவர் முன்னறிவித்ததுபோல் உயிர்த்தெழுவாரென்று அவள் உறுதியாக நம்பியிருந்தாள். கபிரியேல் வானதூதன் அறிவித்ததுபோல் யேசுநாதர் தாவீதனின் அரியணையில் ஏறித் தம் முடிவில்லா ஆட்சியைத் தொடங்கும் நாள் தொலைவில் இல்லையென்பதும் அறிந்திருந்தாள். மரியம்மாள் இவை அனைத்தையும் தியானித்துக் கொண்டிருக்கையில் உயிர்த்த யேசுநாதர் திடீரென்று அவ்வறையில் அவளுக்குக் காட்சி கொடுத்தார். அவருடைய உடைகள் பனிக்கட்டியிலும் வெண்மையாகவும், முகம் பகலவனைவிட ஒளி மிக்கதாகவும், உடல் முழுமையும் மாட்சி துலங்குவதாகவும காட்சி அளித்தன. மரியம்மாள் முழந்தாளிட்டு கடவுளும் ஆண்டவருமான தன் திருமகனை வணங்கினாள். யேசுநாதர் தன் அன்னையை எழுப்பி அன்புடன் அவளை அரவணைத்தார். "அன்னையே மனங்களிகூரும்; உம் துயரங்கள் முடிவுற்றிருக்கின்றன அல்லேலூயா" என்ற வாழ்த்துச் செய்தி அவளுடைய காதுகளில் நல்லிசை மீட்டியது. "எம் மகனே! உம்மை மீண்டும் உயிருடன் காண நேர்ந்ததே எனக்கு முடிவில்லா பேரின்பம்" என்று அவள் உள்ளம் உருகி நின்றாள். யேசுநாதர் தம் தாயை அரவணைத்தவண்ணமே அவருடைய வீரத்தன்மையைப் போற்றிப் புகழ்ந்து நின்றார். மரியம்மாள் தன் திருமகனின் முகத்தை உற்று நோக்கி அவரது அரவணைப்பில் இன்புற்று மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கி நின்றாள். அந்தக் காட்சியைக் கண்டு வானதூதர் களிப்பெய்தி அல்லேலூயாக்கீதம் முழங்கியிருப்பர்.

யேசுவின் மரணத்திற்கும் உயிர்ப்புக்கும் பின்பு சீடர்களின் கூட்டங்களில் மரியம்மாளுக்கு மிக மதிப்புக்குரிய இடம் அளிக்கப்பட்டது. அப்போஸ்தலர்களும், சீடர்களும் அவளைக் கடவுளின் தாயென மதித்து அன்புசெய்துவந்தார்கள். மனத்திடமும் ஆறுதலும் பெறும்பொருட்டு அவர்கள் மரியம்மாளை நாடிச் சென்றார்கள். சீடர்களின் விசுவாசம் அப்பொழுது உறுதிப்பட்டிருந்ததில்லை. மரியம்மாள் கடவுள் அருளை நிரம்பப் பெற்றிருந்தவளாதலால் அவளுடைய விசுவாசம் என்றும் குன்றா ஒளி வீசி விளங்கியது. எனவே பரிசுத்த ஆவியின் வருகை வரையிலும் கிறிஸ்துவின் சீடர்களின் விசுவாசத்தை மரியம்மாள் உறுதிப்படுத்தினாள். சீடர்களின் கூட்டங்களில் அவள் பங்குகொண்டு அவர்களுக்கு அன்பும் ஆதரவும்காட்டிவந்தாள். யேசுநாதர் உயிர்த்தபின்பு நாற்பது நாட்கள் தம் சீடர்களுக்களித்த முக்கிய காட்சிகளின் பொழுது மரியம்மாளும் அவர்களுடன் இருந்தாளென்றே கருதப்படுகின்றது.

பெந்தக்கோஸ்த் நாளில் மரியம்மாள் பரிசுத்த ஆவியால் மீண்டும் நிரப்பப்பட்டாள். 33 ஆண்டுகளுக்கு முன்பு ஒருமுறை நசரேத்தூரில் அவளுடைய எளிய விடுதியில் அவள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படவே இரட்சகரின் தாயானாள். பெந்தக்கோஸ்த்நாளில் அதே பரிசுத்த ஆவி அவள்மீது மீண்டும் இறங்கி அவளைத் திருச்சபையின் தாயாக உறுதிப்படுத்தினார். கபிரியேல் வானதூதவர் வாழ்த்துச்செய்தி கூறிய அந்நாளில் யேசுவைக் கருவேந்தி இரட்சகரின் தாயானாள். பெந்தக்கோஸ்த்தன்று அவள் யேசுவின் ஞானவுடலைக் கருவேந்தி திருச்சபையின் தாயானாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளரும் கிறீஸ்தவர்களும்

தொழிலாளர் இடர்ப்பாடுகள் களையப்படவேண்டும்; அவர்களின் ஏழ்மைநிலை ஒழிக்கப்பட வேண்டும்; அவர்களுடைய இல்லாமை, இயலாமை துடைக்கப்பட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டக் கூடிய ஒரு நாள், தொழிலாளரின் தூய உள்ளத்தைத் திறந்து காட்டும் நாள், அவர்களின் தன்னலங் கருதா தியாகச் செயலைத் திக்கெட்டும் தெரிவிக்கும் நாள், அவர்களின் வாழ்வையும், வளத்தையும், ஊக்கத்தையும், உற்சாகத்தையும், உழைப்பையும், அதன் பயனையும், கண்ணியம் நிறைந்த கடமையுணர்ச்சியை எடுத்துக்காட்டி, அவர்களின் உரிமைக்குரலை உலகுக்கு அறிவிக்கும் நாள், உலகமெங்கும் கொண்டாடும் மேதின நாளாகும்.

தொழில் இல்லையென்றால், தொழிலாளர் இல்லையென்றால் ஒருநாடு இருக்க முடியாது. ஏன், இந்த உலகமே இருக்க முடியாது. எனவே, ஊருக்கு உழைக்கப் பிறந்தவர்கள், உலக நலனுக்கு உழைக்கப் பிறந்தவர்கள் தொழிலாளப் பெருமக்கள். இதை யாரும் மறுக்க முடியாது.

ஒரு நாடு மற்றொரு நாட்டை மதிக்க வேண்டுமென்றால், போற்றிப்புகழ வேண்டுமென்றால், உலக நாடுகளோடு சரிநிகர் சமானமாகத் திகழ வேண்டுமென்றால், அந்தநாடு தொழில்வளம் நிறைந்த நாடாக இருக்கவேண்டும்.

உண்டுகளிக்காமல் உழைக்கப் பிறந்தவர்களே தொழிலாளர்கள். நாட்டின் சீருக்கும் சிறப்புக்கும், பேருக்கும் புகழுக்கும் பாடுபடுகிறவர்களே தொழிலாளர்கள். உலகத்தில் பிறந்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ஒவ்வொருவிதத்தில் தொழிலாளர்கள் ஆவார்கள்.

உழைப்பின் சின்னங்களாகிய தொழிலாள பெருமக்களுக்கு அவர்களின் உழைப்பை மதித்துப் போற்றுவதற்கு உலகை உருவாக்கும் உழைப்பாளி மக்களுக்கு நன்றி தெரிவிக்க எழுந்த நாளே இன்று உலகமெங்கும் கொண்டாடப்படும் மேதின நாளாகும்.

"மேதினத்தைக் கொண்டாடும் உரிமை எங்களுக்கே உரியது" என்று பொதுவுடமைக் கட்சிக்காரர் சொல்வதுண்டு. அவர்கள் சொல்லட்டும். யார் வேண்டாமென்று சொல்வது? "எங்களுக்கே உரிமையுடையது" என்று சொல்வது தவறு. மேதினவிழா உருவான வரலாறே வேறு. (ஐக்கிய) அமெரிக்கநாட்டில் தொழிலாளர்கள்




ஒருநாளைக்கு 12 மணிநேரம் வேலைசெய்ய வேண்டும் என்ற ஓர் அநீதியான சட்டம் இருந்துவந்தது. அந்தஅநீதியைப் போக்க சிக்காகோ நகரிலுள்ள தொழிலாளர் வீறு கொண்டு எழுந்தனர். ஒரு நாளைக்கு 8மணிநேரம் உழைப்பு, 8மணிநேரம் ஓய்வு, 8 மணிநேரம் உறக்கம் என்று தங்கள் உரிமைக்குரலை எழுப்பினர். அதன் பயன் துப்பாக்கிஒலி முழங்கியது; தொழிலாளர்களின்குருதி சிக்காகோநகர்வீதியில் ஆறாக ஓடியது; பிணங்கள் மலையாகக் குவிந்தன. இறுதியில் நீதி வென்றது. நேர்மை மலர்ந்தது. அநீதி அழிந்தது. தொழிலாளரின் உரிமைக் குரல் கேட்கப்பட்டது. வெற்றி நிலைநாட்டப்பட்டது. அந்த வெற்றித் திருநாளை, தியாகத் திருநாளை சிக்காகோ மக்கள் மேதினமாகக் கொண்டாடினர். அந்தத் திருநாள் உலகமெங்கும் பரவியது. எனவே, மேமுதல்நாள் தொழிலாளர் தினமாகஇன்று உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது.

"மேதின விழா எங்களுக்கே உரிமையுடையது" என்று சொல்லிவந்த ருஷியா, சென்ற ஆண்டு மே முதல் நாளிலிருந்து அந்த நாளைக் கொண்டாடுவதை ரத்து செய்துவிட்டது. ருஷியாவின் தலைநகர் மாஸ்கோவில் செஞ்சதுக்கத்தில் ஆண்டுதோறும் நடைபெற்றுவந்த மேதினவிழா இராணுவ அணிவகுப்பு சென்றஆண்டு முதல் நிறுத்தப்பட்டுள்ளது. மேதின விழாவுக்குப் பதிலாக நவம்பர் 7-ம் நாளை புரட்சித் தினமாகக் கொண்டாட ருஷியஅரசாங்கம் அறிவித்துள்ளது.

கிறிஸ்துசமயத்தைச் சார்ந்தவர்கள் இந்த மேதினவிழாவைக் கொண்டாடவேண்டுமா? ஏன்கொண்டாடவேண்டும்? எதற்காகக் கொண்டாடவேண்டும்?

கிறிஸ்துவ சமயமானது தொழில் வளர்ச்சிக்கும், தொழிலாளர் நலத்துக்கும் என்றும் முட்டுக்கட்டையாக இருந்ததில்லை — இருக்காது — இருக்கப்போவதுமில்லை. இருள் சூழ்ந்த தொழிலாளர் உள்ளத்தில் ஒளி விளக்கை ஏற்றி வைப்பதற்காக மே தினத் திருநாளை தொழிலை மதிப்பதற்கும், தொழிலாளர்களைக் கௌரவப்படுத்துவதற்கும் தொழிலாளர் தினமாகத் திருச்சபை ஏற்றுள்ளது.

எனவே, மே தினத்தைக் கொண்டாடும் நாம் மேதின நாளில் புனித சூசையப்பர் திருநாளையும் கொண்டாடுகிறோம். ஏன் இந்த சூசையப்பர் திருநாளை மே முதல் நாளில் கொண்டாடுகிறோம்? யார் இந்த சூசையப்பர்? ஏழடுக்கு மாளிகையில் வீற்றி [illegible]
[illegible]

(4-ம்பக்கம் பார்க்கவும்)

# வாழ்வளிக்கும் தொழில்கள்

மனிதனை இல்லை—உலகினையே வாழவைக்கிறது தொழில். தொழில் இன்றேல் மனித சமுதாயமே இல்லை. இவ்வுலகில் தொழில் செய்யாதவர் ஒருவரும் இல்லை. எல்லோரும் ஏதோ ஒரு தொழிலைச் செய்து கொண்டேயிருக்கின்றனர். பல்வேறுவகைப்பட்ட தொழில்களும் மனிதசமுதாயத்தை பின்னிப்பிணைத்து இணைக்கின்றன.

நான் குறிப்பிட்ட ஒரு தொழிலைச் செய்கிறேன்; அது எனக்கு மட்டுமல்ல அது எனக்குப் பயனைத்தருவதோடு நின்றுவிடாது இன்னும் எத்தனையோ பேருக்கு நன்மையளிக்கக்கூடியதாகவும் இருக்கிறது. எனவே தொழிலை மனித சமுதாயத்தை இணைத்துவைக்கும் இணையற்ற நண்பன் என்று கூடக் கூறிவிடலாம். உதாரணமாக வீதி கூட்டும் தொழிலாளியை எடுப்போம். அவன் மட்டும் ஒரு நாளைக்கு நகரவீதியைத் துப்புரவு செய்யாதிருந்தால் வீதிகள் குப்பை கூளத்தால் நிறைந்து வழியும்—சாக்கடை தேங்கி துர்நாற்றமடிக்கும். போக்குவரத்துச் செய்வதே சிலவேளைகளில் கஷ்டமாகவிருக்கும். இதனால் எத்தனை பேர் பாதிக்கப்படுவர்? இப்படியே ஒவ்வொரு தொழிலும் அனைவருக்கும் வேண்டியவை. சமுதாயம் சிறப்புடன் திகழ வேண்டுமானால் தொழில்கள் அனைத்தும் சமம். அவற்றிலே ஏற்றத்தாழ்வு இல்லை; எல்லாம் எல்லோர்க்கும் வேண்டியவை என்ற மனப்பான்மை நம்மிடையே வளருமானால் உண்மையில் நமது மக்கள் சமுதாயத்தில் எந்தவிதமான பிரச்சினைகளோ போட்டிபூசல்களோ இருக்கமாட்டா. நாமனைவரும் ஒருதாய் மக்கள் என்ற சமரசநிலை அனைவரிடையேயும் விளங்கும்.

உலகப்புகழ்பெற்ற அமெரிக்க ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன் ஒருமுறை வெள்ளை மாளிகையில் தமது சப்பாத்துகளுக்குப் பொலிஷ் போட்டுக் கொண்டிருந்தார். ஆங்கிலேயர் ஒருவர் அவரைக்காண வந்து 'என்ன நீங்களே உங்கள் சப்பாத்துப் பொலிஷ் போடுகிறீர்களே என்றார். அப்போது லிங்கன் அப்படியானால் நீங்கள் யாருடைய சப்பாத்துக்குப் பொலிஷ் போடுவீர்கள்? என்று சுடச்சுடக் கேட்டார். வந்தவர்வாயடைத்து நின்றார். தொழிலின் மகத்துவத்தை மக்கள் சமுதாயம் என்று உணருமோ அன்றுதான் அது விடுதலை பெற்ற சமுதாயமாகத் திகழும்.

கொட்டும் மழையிலே கொளுத்தும் வெயிலிலே, நடுங்கும் பனியிலே ஆலைவாய்க் கரும்புபோல — மாடுபோல் உழைத்துநாடாளும் மன்னன் முதல் வீடுறையும் குழவிவரையுள்ள அத்தனை பேருக்காகவும் உழைக்கிறான் தொழிலாளி. ஆனால், அவனோ முதலாளிகளால் அடக்கியொடுக்கப்படுகிறான். சுதந்திரநாடு என்ன பேச்சு ஆனால் பொருளாதாரத்துறையில் நாம் அடிமைகளாகவிருக்கிறோம்.

நானாவித தொழில்களையும் பேணிப் பாதுகாத்து அவற்றை வளர்ப்பதன் மூலமே பொருளாதாரத்தை மேனிலைப்படுத்த முடியும். உத்தியோக வேண்டும் என்ற நோக்குடன் வாழும் இளைஞர் பலதரப்பட்ட தொழில்களையும் செய்ய முன்வர வேண்டும். விவசாயம் கைத்தொழில் போன்றவற்றிற்கு முக்கியத்தவம் அளிக்கப்பட வேண்டும். உத்தியோகம் பார்க்கும் இளைஞரை மணக்கக் காத்திருக்கும் இளம் பெண்கள் விவசாயத்தையும் ஏனைய பிற தொழில்களையும் புரியும் வாலிபரை மணக்க முன் வரவேண்டும்.

வைகாசி 1-ம் திகதி அகில உலகிலும் தொழிலாளர்தினம் கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி எங்கும் ஊர்வலங்கள், விழாக்கள், கூட்டங்கள் என்பன நடைபெறுகின்றன. ஆனால், உலகிற்கு உயிர் அளிக்கும் தொழிலாளர்களின் நலன்களைக் கவனியாதுவிடின் சமுதாயத்திற்கு எதுவித விமோசனமும் கிடையாது.

எனவே, தொழிலாளரின் பாதுகாவலரான புனிதசூசையப்பரின் மாதிரிகையைப் பின்பற்றி தொழில்களை நம் உயிராகமதித்து அதற்குரிய அந்தஸ்தை அளிக்க வேண்டும். அப்போதுதான் நாடு சிறப்புறும். அனைவரும் மகிழ்வுடன் வாழவழிபிறக்கும். தொழில்கள் வளர்க! தொழிலாளர் வாழ்க!! நாடுசிறக்கப் பாடுபடுவீர்!

— இ. பேர்னாட்

---

● எயரொன அறியப்படும் சுதந்திர கத்தோலிக்க அயர்லாந்தின் ஜனாதிபதியான டி வலேரு அவர்களும், பாரியாரும் தங்கள் திருமண 60ஆம் ஆண்டு வைரயூபிலி சமீபத்தில்வந்தபோது டபிளின் நகர போனிக்ஸ் பூங்காவில் அமைந்துள்ள தங்கள் வாசஸ்தலத்தின் சிற்றாலயத்திலே திவ்விய பூசைகண்டு அதைக் கொண்டாடினார்கள்.

● கம்யூனிஸ்த நாடான யூகோசிலேவியாவின் தலைவராகிய ஜனாதிபதி ரிற்றோ வருகிற இலையுதிர்காலத்தில் இத்தாலிய அரசாங்கத்தின் விருந்தினராக ரோமை நகருக்கு விஜயஞ்செய்யவிருக்கின்றார். அப்போது அவர் வத்திக்கான் மாளிகை சென்று பாப்பரசரைச் சந்திப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

● இரண்டாவது உலக யுத்தம் நடைபெற்ற காலமுழுவதும் ஹிற்லரின் நாஸிய ஒற்றர்கள் வத்திக்கானில் உளவுபார்த்து, 12ஆம் பத்திநாத பாப்பானவரையும் கண்காணித்துவந்தார்களென்றும், ஆனால், அவர்களின் தந்திரசூழ்ச்சிகள் பலனளிக்கவில்லையென்றும் ஒருயேசுசபைக் குருவான வண. றொபேட் கிறகம்சுவாமியார் "சிவிற்றா கற்றோலிக்கா", என்ற யேசுசபையாரின் பிரசுரத்தில் ஒரு விரிவான செய்தி வெளியிட்டிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தொழிலாளரும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தனு? இல்லை, இல்லவே இல்லை. அவர் ஒரு சர்வ சாதாரண தொழிலாளி. வறுமையே வடிவமாகக்கொண்ட ஒரு தொழிலாளி. தரித்திரமே உருக் கொண்ட தச்சு வேலை செய்யும் ஒரு தொழிலாளி — கிறிஸ்து பெருமானின் வளர்ப்புத்தந்தை. கிறிஸ்துபெருமானின் வாழ்க்கையில் தரித்திர நிழலை நடமாடச் செய்த ஒரு ஏழைத் தொழிலாளி. நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த, மரச் சாமான்களோடு போராடி வந்த ஓர் உத்தமதொழிலாளி. அன்னைமரியின் அருமைப் பத்தா. உழைப்பின் தத்துவத்தை மரியன்னைக்கு எடுத்துக்காட்டி, அவரையும் தன் தொழிலில் ஈடுபடச் செய்த ஓர் உன்னத உழைப்பாளி. எனவேதான் தொழிலாளர் நலத்தில் நாட்டம் கொண்டுள்ள திருச்சபை புனித சூசையப்பர் திருநாளை இந்த மே தின முதல் நாளில் ஏற்படுத்தி தொழிலாளரின் பாதுகாவலருடைய தினமாக ஏற படுத்தி — தொழிலாளர் தினமாக ஏற்படுத்தி, தொழிலுக்கும் தொழிலாளர்களுக்கும் தன்மதிப்பையும், ஆசியையும் அளித்துள்ளது.

தொழிலாளர் நலம் பெற வேண்டும்; வாழ்ந்து வளம் பெறவேண்டும்; வாழ்க்கையில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற ஒரே காரணத்தினுல்தான் 13-ம் சிங்கராயர் என்ற பாப்பரசர், 'ரேரும், நோவாரும்' — முதலாளியும், தொழிலாளியும் என்ற சிறப்புவாய்ந்த தமது நிருபத்தில் முதலாளி – தொழிலாளி இவர்களுடைய கடமைகளைக் குறித்து உலகுக்கு ஓர் ஒப்பற்ற நிருபத்தை 1903 இல் வெளியிட்டார். அந்தநிருபம் தொழில் உலகத்தில் போற்றிப் புகழக்கூடிய ஒப்பற்ற காவியமாகஇருக்கிறது. இதிலிருந்து கத்தோலிக்க திருமறையானது தொழிலாளர் நலத்தில் நாட்டம் கொண்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

தொழிலாளர்களுக்கு ஆவேச உணர்ச்சியும், உரிமைத் தாகமும் மட்டும் இருந்தால் போதாது. கட்டுப்பாடு நிறைந்த கடமைஉணர்ச்சியும் இருக்கவேண்டும், கடமையைக் கண்ணியத்தோடு செய்தால்தான் உரிமைக்குப் போராடமுடியும். அந்த உரிமைப் போராட்டத்தில் வெற்றியும் காண முடியும். எனவே, தொழிலாளர்கள் தங்கள் தொழிலுக்குரிய ஒழுக்கத்தோடிருந்து பணியாற்ற முயற்சிக்கவேண்டும்.

தொழிலாளர் உள்ளத்தில் வேதனை, வெறுப்புணர்ச்சி, பகை உணர்ச்சிகளை மூட்டிவிடக்கூடிய வகையிலே கிளர்ச்சிகள் அமைவதைக் கத்தோலிக்க திருமறை இன்றல்ல, எப்போதுமே விரும்பியது இல்லை.

மாற்ருரிடத்தில் பகைமையைக் காட்டாது, பிறர்சிநேகம் என்ற அன்பு காட்ட வேண்டும். அதை வளர்க்க வேண்டும். தங்கள் நடத்தையால், தொழில் திறமையால், மற்றவர்களுக்கு முன்னேடியாக இருக்கவேண்டும். நாம் செய்யும் தொழிலால் நம் திருமறையின் தத்துவங்களை மற்றவர்களும் அறியச்செய்ய வேண்டும். இதுவே சிறந்த வேத போதகமாகும். நம் திருமறையைப் பரப்பும் சீரிய பணியாகும்.

முதலாளி – தொழிலாளி இவர்களுக்கிடையே அன்பு வளர ஒன்றுபட்ட கருத்துக்கள் மிளிரவேண்டும். தொழிலாளர்கள் தொழில்துறையில் வல்லவர்களாக மட்டும் இருந்தால் போதாது. அவர்கள் நல்லவர்களாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும், தாங்கள் மேற்கொண்டுள்ள தொழிலில் கடமையுணர்ச்சியுள்ளவர்களாகவுமிருந்து மனச் சாட்சிக்கு விரோதமில்லாமல் தங்கள் கடமையைச் சரிவர ஆற்ற வேண்டியவர்களாகவும் இருக்கவேண்டும்.

"உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார் — மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல்பவர்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறள் நெறியைப் பின்பற்றி,

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற பாரதியின் பாட்டை மனதில் வைத்து, நாட்டின் தொழில் துறையில் ஏறு, முன்னேறு என்று ஏற்றம் கண்டு உழைக்க, இனி ஒரு விதி செய்வோம் — அதை எந்நாளும் காப்போம்.

— சத்தியசுடர்

## மகள் தாய் : : தாய் மகள்

அவுஸ்திரேலியாவிலுள்ள மாறிஸ்ற் கன்னியாஸ்திரிகளின் மடமொன்றிலே ஒரு தாய் தான் பெற்ற பிள்ளையைத் தாயென்று அழைக்கிருள். இந்த மடத்துக்குப் பெரிய தாயார் மதர் ரூமானுஸ், இவரின் தாயார் அதேமடத்தில் ஒரு கன்னிகாஸ்திரியாகப் பணிபுரிகிருர். நாலு பிள்ளைகளுக்குத் தாயான இவரின் மூன்று புத்திரிகள் கன்னிகாஸ்திரிகள். இப்புத்திரிகளில் ஒருவர் தான் பெரியதாயார் மதர் ரூமானுஸ். புத்திரிகள் மூவரும் மடத்தில் சேர்ந்தபின்னர் இவர்களின் தாயாரும் அவர்களைப் பின்தொடர்ந்தார்.

### நன்றித்துதி

யேசுவின் திருஇருதய இரக்கத்தினுலும், பரி. சதாசகாய மாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். யூதாததேயு, அர்ச். செபஸ்தியார், அர்ச். தெரேசம்மாள் இவர்களின் வேண்டுதலாலும் நான் இரந்து கேட்டபடி எனது குடும்பத்தில் ஒருவருக்குவந்த கடும் சுகவீனம் குணமாகியது. காலதாமதத்திற்கு மன்னிப்புக்கோரி நேர்த்தியின்படி இதை பிரசு ரிக்கிறேன்.

மிருசுவில் பி. எம்.

## அவர்கள் பார்த்துக்கொண் ....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லை. தமது தேவதூதரால் வருக்கப்பட்ட நீதிமான்களைப் பார்த்து, (பரி. மத். 25ஆம் அதி. 34ஆம் வச). "என் பிதாவினுல் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே; உலகம் உண்டானது முதல், உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்ட, மோட்ச இராட்சியத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" என்பார். அப்படியே தமது போதனைகளைக் கைக்கொள்ளாது, மனம்போன போக்கின்படி சீவித்த அநீதரைப் பார்த்து (பரி. மத். 25ஆம் அதி. 41ஆம் வச.) சபிக்கப்பட்டவர்களே! என்னைவிட்டகன்று பசாசுக்கும் அதன் தூதர்களுக்கும் ஆயத்தம்பண்ணப் பட்டிருக்கிற, நித்திய நரக ஆக்கினைக்குப் போங்கள்." என்று கூறுவார். என்ன பயங்கரமான தீர்ப்பு!

இந்த இரண்டாம் வருகையைப்பற்றி அதிகமாக மனிதர் உணர்வதில்லை நம் மீட்பர் தமது மூன்று வருடப் போதனைக்காலத்தில் அடிக்கடி விளக்கமாக, கண்டிப்பாக, பல உதாரணங்களால் உவமைகளால் அச்சுறுத்திக் கூறியிருக்கிருர். பத்துக்கன்னியர் உவமை, விழிப்புள்ள ஊழியன் உவமை மூலம் மிகத்தெளிவாக விளக்கியுள்ளார். விழித்திருந்து செபியுங்கள் என்று எச்சரித்துஇருக்கிருர் மனுமகன் கள்ளனைப்போல் நினையாத நேரத்தில் வருவார் என்றும் ஆகையால் எந்நேரமும் ஆயத்தமாய் இருக்கவேண்டும் என்றும் மனுமகன் வரும் நாளும் நாழிகையும் முதன் முதலாய் அறியமாட்டார் என்றும்தெளிவாகக்கூறினுர். அத்துடன் தாமே தமது 2ஆம் வருகையைப்பற்றி, (பரி. லூக். 21ஆம் அதி 27ஆம் வச.) அப்போது மனுமகன் மிகுந்த வல்லபத்தோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருவதைக் காண்பீர்கள்" என்று விளக்கினுர்.

நம் அன்பின் இரட்சகர் மக்களின் விண்ணக வாழ்வை எவ்வளவுதூரம் விரும்புகிருர் என்ருல் மக்களும் அவருடன் ஒன்றுசேர்ந்து அவரின் வருகைக்குத் தம்மைத் தயாரிப்பதில்தான் தங்கியிருக்கிறது. அவரது வருகையின் பெறுபேறு ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கையின் கணக்கை ஒப்புவிப்பதில்தான் தங்கியுள்ளது. நாகரீக வாழ்க்கை வாழ்ந்தேன் என்பதிலும் அல்ல, விஞ்ஞானத்தைக் கண்டுஎன் பதிலும் அல்ல, சந்திரமண்டலத்துக்குப் பறந்தலன் என்பதிலும் அல்ல, நம் மீட்பர் கேட்டுக்கொண்டபடி அவரது கற்பனைகளைக் கைக்கொண்டு அவரது ஒரே போதகத்தைக் கடைப்பிடித்து பசித்தோர்க்கு உணவும், தாகித்தோர்க்குப் பானமும், வஸ்திரமற்றோர்க்கு உடையும், பரதேசிகளுக்கு வசிப்பிடமும், வியாதிஸ்தருக்கு ஆறுதலும், சிறைப்பட்டோருக்கு உதவியும் செய்தோம் என்று கூறுவதில்தான் 2-ம் வருகையின் தயாரிப்பு அடங்கியுள்ளது. அவர்தாமே "என்னுடைய மிகவும் சிறியவர்களாகிய இவர்களுக்குச் செய்ததை எனக்கே செய்தீர்கள்" என்று கூறியிருக்கிருர். பத்துக் கற்பனையின் சுருக்கமாகிய இரண்டுகற்பனைகளின் அர்த்தம் முழுவதும் இதில் அடங்கிவிட்டதல்லவா? ஆகையால், கிறிஸ்தவர்களாகிய நாம் அவர் தமது அப்போஸ்தலருக்குப் போதித்த சத்தியங்களை விசுவசித்து, அவரது தேவசிநேகப் பிறர்சிநேகக் கற்பனைகளைக் கைக்கொண்டு, நம்மை ஏமாற்றி வரும் லௌகீக இன்பங்களில் உறங்கிப்போகாது விழிப்பாயிருந்து செப தபத்துடன் சீவித்தால் கிறீஸ்துவில் வாழ்வோம். கிறீஸ்துவில் மரிப்போம். கிறீஸ்துவுடன் உத்தானமாகி, என்றென்றும் விண்ணரசின் மகிமையில் பங்குபற்றுவோம்.

அ. செபஸ்தியாம்பிள்ளை
(முத்துவைத்தியர்) அவர்களின்

## 3-வது வருட மரண ஞாபகம்

| பிறப்பு : | இறப்பு : |
|---|---|
| 3—7—1896 | 1—5—1967 |

மூவாண்டு சென்றதையோ
தந்தாய் எங்கள்
உள்ளமெலாம் நெருப்பெரியப்
பறந்திட்டாயோ
சீராண்டு பொன்சொரிந்த
வதனம் காணேம்
செங்கரும்பு மொழிகேளாப்
பாவியானேம்
தூண்டுகின்ற அன்பினெடு
தடிக்கலானேம்
தூயபரன் அடிகளில் நீர்
சாந்திகொள்ளத்
தினமுமே வேண்டுகின்றேம்.

[illegible]
[illegible]
திக்காக மன்ருடுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேம். வைகாசி 4-ந்தேதி திங்கட்கிழமை காலை 6-15-க்கு யாழ்ப்பாணம் ஆசனக்கோவிலில் துக்கப் பாடல்பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரை இழந்து துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்.

48-70

● ஜெறி மொக் எனும் பெண்மணி சமீபத்திலே ஒற்றை எஞ்ஜின்பூட்டிய செஸ்னு சூப்பர் ஸ்னகைலேன் விமானம் ஒன்றிலே தனிமையாக முதன்முதலாய் உலகத்தைச் சுற்றிவந்து ஒருசாதனையை நாட்டியிருக்கின்ருள். இவள் தனது பிரயாணம் முடிந்ததும் அந்த விமானத்தை நியூகினியாவிலுள்ள ஒருமிஷனரிய குரு விமானிக்கு அன்பளிப்புச் செய்துள்ளாள். இதனைப் பயன்படுத்த விருப்பவர் பிஸ்மாக்தீவுக் கூட்டத்தில் ஆங்காங்கு பரந்துள்ள தீவுகளில் தொண்டாற்றி வருகின்றவண. அந்தோனி ஜென்சோ சுவாமியாரே.

அ. சா. மைக்கல்
ஜெபமணியின்
8-வது தின
நினைவு நாள்
29-4-70

| தோற்றம் : | மறைவு : |
|---|---|
| 4-10-19 | 29-4-70 |

இதனைக்கண்ணுறும் அன்பர்கள் அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டுமாறு தயவாய்க் கேட்கின்ரேம்.

சித்திரையில் பிறந்த மலர்ச்சி சிந்திக்குமுன் சீர்கெட்டு விட்டதே! சிறியோர் எம்மலர்வதனம் சிந்திக்கமுன் வாடியதே பப்பா! அனுதைகளாக எம்மை விட்டுப் போய்விட்டாயே பப்பா! அருமையாய் உன்னை எட்டுத்திக்கும் எண்மரும் தேடியலையினும் உன்னைப் போல் ஒரு தந்தையை உலகிலே என்றும் காண்போமோ, உன்னைவிட்டுப் பிரிந்த எங்கள் உள்ளங்கள் என்றுமே பரமனிடம் உனக்காகப் பரிந்து பேசிடுமே பப்பா! கருணையுரு இறைவனின் மதிமுகம் நீ கண்டு அக்களிக்க வேண்டுகிரும்!

பிரிவால் துயருறும் பிரியமனைவி
நீற்ரு ஜெபமணி,

பிள்ளைகள் :
விக்ரர், ஞானபுஷ்பம், வெரோணிக்கா, எனுதெரேஸ், தாசன்மைக்கல், நவீந்திரன், வசந்தா, மார்க்கஸ்,

சகோதரி:
குருஸ் அலக்சாண்டர், S. M.¦S. அன்ரனியின்குடும்பம், தெரேஸ் தாசன் குடும்பம், மைக்கல் அன்ரனியின் குடும்பம், சகோதரி. சிஸ். எம். எறிக்கா. ஏ. சி,

173, முகாந்திரம்ஸ் வீதி,
கொள்ளுப்பிட்டி.

வெளிவந்துள்ளது :

ஆண்டவருடைய
புதுமையுள்ளகல்லறைச்செபம்
என்ற பெயருடன்
ஒரு புத்தகம்.

எழுதுங்கள் :
எஸ். எம். இன்னுசிமுத்து,
சென் தோமஸ்வீதி,
மாதகல், P. O.

திரு. ஜே. எம். செல்லர்
திரவியம் மனுவேற்பிள்ளை
அவர்களின்

## 1-ம் ஆண்டு மரண ஞாபகம்

| தோற்றம் : | மறைவு : |
|---|---|
| 25-12-1888 | 27-4-1969 |

ஜே. எம். செல்லர் திரவியம் இறைவனடி சேர்ந்த முதலாவது வருடம், முடிவெய்தியதையிட்டு கொழும்பு முகத்துவாரம் சென். ஜேம்ஸ் ஆலயத்தில் அவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதனைக் கண்ணுறும் அனைவரும் அவருடைய ஆன்மா சாந்தியடைய மன்ருடும்படி மிகவும் பணிவன்புடன் வேண்டுகிரேம்.

அவர்களது பிரிவால் பரிதவிக்கும்,

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

664/11, அளுத்மாவத்தை வீதி,
கொழும்பு—15.

51-70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்புள்ள தம்பி-தங்கையரே வணக்கம்!**



தேவமாதாவின் வணக்கமாதம் வந்துவிட்டது. எமது பரலோக அன்னையைப் புகழ்ந்து கொண்டாடும் மாதமிது. தேவதாயின் பிள்ளைகளாகிய நாம் எம் அன்னையின் குணுதிசயங்களைத் தியானித்து அவைகளைப் பின்பற்ற வேண்டும். தேவன் அவவுக்கருளிய வரங்களையிட்டு, அவரைத் துதித்து, நன்றிகூறி எம் அன்னையையும் பாராட்ட வேண்டும்.

இந்த வணக்க மாதத்தை உங்கள் ஆத்தும ஞானச் சீவியம் வளருவதற்கு ஏற்ற காலமாக்கிக் கொள்ளவும் வேண்டும். தேவதாயார் வரப்பிரசாதங்களின் மத்தியஸ்தி. எமது இரட்சணியத்திற்காகக் கிறிஸ்துநாதருடன் பாடுபட்டவ. ஆகையால், இந்தத் தாயாரின் உதவியை இம்மாதத்தில் விசேஷவிதமாகக் கேளுங்கள். வணக்கமாதத்தின் பிரதான கிருத்தியமாகச் செபமாலையைச் செபியுங்கள்.

அமலோற்பவநாயகி உங்களைத் தமது பாதுகாவலில் வைத்து தமது திருச்சுதனின் சாயலை உங்களில் பதியச் செய்வாராக.

— அண்ணு

# குழந்தை உள்ளம்

நானும் ஒரு கதை எழுதிவிட வேண்டுமென்ற என் ஆவலைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் பேனையையும், பேப்பரையும் கையிலெடுத்துக் கொண்டு மேசையில் குந்தினேன். எழுதுவதென்றால் எப்படித்தான தொடங்குவதாம். எழுதவே வரமாட்டேங்குதே. இப்படி ஆராய்ச்சி செய்து மூளையைக் குழப்பினதுதான்மிச்சம். என்ன செய்வது என் கற்பனுசக்தி "ஸ்ரைக்" பண்ணிவிட்டது. சில பேர் சொல்கிருர்கள் எழுதுவதற்கு 'மூட்' வேண்டுமென்று; அப்படியானல் அது வரும் வரைக்கும் காத்திருக்க வேண்டுமோ? நேரம்ஓடிக் கொண்டிருந்தது. நேரத்தையும், பேப்பரையும் செலவழித்தேனேதவிர கதை எழுதிய பாடாயில்லை. அப்போதுதான் என்னைப் பெற்றதாய் "தம்பி தேனீர்"என்று அறையினுள் பிரவேசித்தாள்.

இவ்வளவு நேரமும் சிந்தனையில் மூழ்கியிருந்தநான் மீண்டும் பூவுலகிற்கு வந்தேன். சாயந்தரமாகிவிட்டதை அப்போதுதான் உணர்ந்தேன். கதை எழுதவில்லையென்ற கவலையோடு அறையைவிட்டு வெளியேறினேன்.

மாலையாகிவிட்டால் ஒரே பரபரப்புத்தான். இந்நிகழ்ச்சி நாளாந்தம் தவருமல் நடக்கும். எங்கள் வீட்டு முற்றத்தில் அகிலத்தின் அரசியான அமலமரி அன்னை அழகுறக் காட்சியளிக்கிருள். அண்ணன் அன்புத் தங்கைக்கு அளித்த நினைவுச்சின்னம். அது எம்மைவளர்த்து ஆளாக்கிய அருமை அப்பாவின் கையால் வடித்த சிறுகட்டிடம். இதைச்சூழ அந்த அன்னைக்கு ஒரு பூந்தோட்டம் அமைத்து அவளை மலர்களுக்கு அரசியாக்க வேண்டுமென்பதுதான் என் ஆசை. இந்தஆசையை பூர்த்திசெய்ய அயராது பாடுபட்டேன். எனவேதான் மாலையில் பூமரங்களுக்கு நீர் ஊற்றுவது என் வழக்கமாகிவிட்டது.

எங்கள் வீட்டிலிருந்து நூறுயார் தூரத்தில் தண்ணீர்க்குழாய் இருக்கிறது. இதிலிருந்து நீர்எடுத்துத்தான் பூமரங்களுக்கு ஊற்றுவேன். அன்றையதினம் நீர்எடுத்துக் கொண்டு திரும்புகையில் என் பின்னே ஒரு பால்மணம்மாரு பச்சிளங் குழந்தை தன்பவளக் கையில் ஒரு பாற்போத்தலை ஏந்தியவண்ணம் பின்தொடர்ந்துவந்து கொண்டிருந்தது. அக்குழந்தையின் வீடு குழாயின் அருகே இருக்கிறது. மாட்டில் பால் கறந்து வீடுகளுக்கு அவர்கள் விற்பவர்கள். இந்தப் பணியைச் செய்யத்தான் அக்குழந்தை புறப்பட்டிருக்கிறது.

"கிளிங்" என்ற ஒரு சத்தம். அவ்வளவுதான் அந்தக்குழந்தையின் கையிலிருந்த பாற்போத்தல் வீதியில் விழுந்து உடைந்து எங்கும் பால்சிந்தியது. இருஇளைஞர்கள் சைக்கிளோடு மிரள மிரள விழித்துக் கொண்டிருந்தார்கள். பாவம், தற்செயலாக அவர்களின் சைக்கிள் அக்குழந்தையின் போத்தலை தட்டிவிட்டது. இவ்வளவும் ஒருகண நேரத்தில் நடந்து முடிந்துவிட்டது. ஆனல், அந்தக் குழந்தை அழுதவண்ணம் பறந்து சென்று, தண்ணீர்க் குழாயின் அருகே நின்று பள்ளியறியா அப்பாவை தன் பொன் போன்றவாயைத் திறந்து அங்கே நின்ற வாலிபரை நோக்கி என்ன சொல்லியது தெரியுமா?

"ஐயோ அண்ணுச்சி... நீங்கபோங்க நான் வீட்டை சொல்லலே. நான் சொல்ல மாட்டன் நீங்க போங்க... நீங்க போங்க."

அந்தப்பிஞ்சுக் குழந்தை இப்படிப் பேசும் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லை. நான் மட்டுமல்ல அங்கே நின்ற வாலிபர்கள் தானும் நினைத்திருக்கமாட்டார்கள். என் கல்போன்ற மனம் கரைந்துவிட்டது. நிலைகொள்ளாமல் தவித்தேன். இப்படியும் ஒரு குழந்தையா?

சிறிது நேரத்தில் குழந்தையின் தகப்பனர் அவ்விடத்திற்கு வந்தார். சைக்கிளில் வந்த இளைஞர்கள், "ஐயா பெரியவரே தெரியாமல் செய்துவிட்டோம் மன்னியுங்கள்" என்றுகூறி, ஒரு ரூபாய்த் தாளை எடுத்து நீட்டினர்கள்.

மீண்டும் அக்குழந்தை அங்குவந்த தன் தகப்பனை இழுத்தவண்ணம் "ஐயா அவையளுக்கு அடிக்காதையுங்கோ. அவையள் பாவம்" என்று கெஞ்சியது.

தகப்பன என்ன செய்வதென்று அறியாது திகைத்தார். அதற்கிடையில் குழந்தையின் தாயும் அங்கு வந்துவிட்டாள்.

குழந்தை, தாயிடம் ஓடிச் சென்று தன்முகத்தை தாயின் சேலையினுள் புதைத்தவண்ணம் "அம்மா, அப்பாவை அவையளுக்கு அடிக்க வேண்டாமென்று சொல்லுங்கோ" என்று வேண்டியது.

தகப்பன் அந்த இளைஞர்களுக்கு ஆறுதல்கூறி, பணத்தை வாங்கமறுத்து அனுப்பி வைத்தார். அந்த இளைஞர்களும் ஒருநன்றிப் பார்வையை உதிர்த்துவிட்டு சென்றுர்கள்.

வீதியில் சிதறிக்கிடந்த போத்தல் துண்டுகளை எடுத்து வீதியோரமாக எடுத்துப் போட்டார்கள் அப்பெற்ருேர்கள். ஒரு வாளி தண்ணீரால், வீதியில இருந்த பாலையும் கழுவிவிட்டு தம் கடமையை முடித்துவிட்டு வீடு திரும்பினர்கள் அவர்கள்.

துள்ளிவிளையாடும் அந்தக் குழந்தை வெற்றிப் புன்னகையோடு தன் பெற்ருேரைத் தொடர்ந்து சென்றது.

இளைஞர்களை மன்னித்த அந்தக்குழந்தை உள்ளத்தின் இந்த நாடகத்தை ரசித்துக் கொண்டிருந்த நான் மீண்டும் வாளிகளைக் கையில் ஏந்திய வண்ணம் வீட்டிற்குச் சென்றேன். அந்த வேளையில்தான் என் வாழ்க்கைப்பாதையில் ஒரு புதியபாதை தோன்றியது.

அமலமரி அன்னையின்முன் மண்டியிட்டு அந்தக் குழந்தை உள்ளத்தை அடியேனுக்கும் தரும்படி இறைஞ்சினேன்.

நான் வளர்த்த அந்த பூந்தோட்டத்தில் மலர்ந்திருந்த செவ்வந்திப்பூவும், லில்லிப்பூவும் என் வேண்டுகோளை ஆமோதிப்பதைப்போன்று ஆடிஅசைந்தன.

அவ்வேளையில் 'ஜில்,என்று வீசிய காற்றில் இலங்கை வர்த்தக ஒலிபரப்பில் "நான் கடவுளைக் கண்டேன் குழந்தைவடிவிலே" என்ற பாடல் மிதந்து வந்தது.

அத்தென்றலின் மகிழ்ச்சியிலே திளைத்தவனய் இச்சம்பவத்தை வரைந்துகொண்டிருக்கிறேன்.

அ. அன்ரன் ஞானப்பிரகாசம்

## தாயே மோட்ச ஏணி!

— இராஜேஸ்வரி ஆபிரகாம், தும்பளை —

சந்திரனைப்போல் ரூபவதியாய் சூரியனைப்போல் ஒளிர்கின்றவளாய் அருணோதயம் போல் எழுந்தருளிவருகின்ற அவள் யார்? அவள்தான தேவதாய்! நானேயாவர்க்கும் அபயம் என்றுகூறும் கரங்கள்! கற்புக்குக் காவல்! அடக்கவொடுக்கம் என்றுகாட்ட நீண்ட முக்காடு! பூரணச் சந்திரனைப்போல் ஒளிவீசிய அழகான வதனம்! நிர்மலமான அழகிய விழிகள்! பார்க்கப்பார்க்கப் பரவசமூட்டும் அவள் அழகை ஈங்கு எழுதி முடியாது. அந்த வானத்துச் சந்திரன்வடிவத்தில் சுந்தரி-பரலோக ஏணி நமது தாய். ஆம், மானிடப் பிறவியாகிய ஒவ்வொருவருக்கும் அவள் தாய். இதை இறைமகன் சிலுவையில் மரிக்கும் போது நமக்குநன்ருகத் தெரியப்படுத்துகிருர். உயிர் துறக்கும் வேளையில் தமது சீடரான அர்ச். அருளப்பரைப்பார்த்து: "இதோ உனது தாய்" என்றும், தாயாரைப்பார்த்து: "இதோ உனது மகன்" என்றும் தெளிவாக நமக்கு அறியப்படுத்துகிருர். அதாவது, நமதுதாய் தேவதாய் எனவும், நாமெல்லோரும் அவளுடைய பிள்ளைகள் எனவும் விளக்கமாக நமக்குக்கூறபிதா சித்தங் கொண்டார்.

ஆதாம், ஏவாள் சிங்காரத் தோப்பில் கட்டிக்கொண்ட பாவத்தின் நிமித்தம் நாம் ஒவ்வொருவரும் ஜென்மபாவிகள். நமது அன்னையோ அப்படிப் பட்டவள் அல்ல. ஜென்மபாவம் சற்றேனும் அணுகா அமலி. அவள் கடவுளால் கடவுளுடைய குமாரனைப் பெறுவதற்கென்றே மாசு மறுவற்று சிருஷ்டிக்கப்பட்டவள். இதைத் தனனுடைய மகளுக்கு அறியப்படுத்த பத்திமாபதியில் லூசியா, யசிந்தா, பிரான்சிஸ் ஆகிய மூன்று சிறுவர்களுக்கும் காட்சிகொடுத்த போது 'அமலஉற்பவம் நாமே' என்று கூறுகிருள். நம்மைப் பத்துமாதம் சுமந்தெடுக்கிருள் அன்னை. இவளோ பாவச்சேற்றில் புரளும் நமக்கு இரட்சணியம் அளிக்கத் தமது குமாரனையே பலியாகத் தருகின்ருள். அவளை அன்னையாக அடையப்பெற்றநாம் எவ்வளவு பாக்கியசாலிகள். தேவ அன்பில் வேரூன்றி, விசேடித்த தேவபராமரிப்பின்கீழ் வளருகின்ருள். தேவசித்தத்தைத் தனது சித்தமாகக் கொண்டு வாழ்கின்ருள். கபிரியேல் என்னும் தேவதூதனுடைய மங்கள வார்த்தைக்குச் செவி கொடுத்து, "இதோ ஆண்டவருடைய அடிமை; உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகக்கடவது" என்றுகூறி தேவ சித்தத்தை நன்மனதோடு ஏற்றுக்கொள்கிருள். நாமும் தேவ சித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதே அவளுடைய அவா.

அவள் நமக்குப் புரியும் உதவிகளோ அளவிடற்கரியது. தன்னை அண்டிவரும் [illegible]

பாவியையும் மனம் திருப்புகிருள். பாவச்சமய வேளைகளில் நமக்குத் துணைபுரிகிருள். துன்பப்படுகையில கைதூக்கி விடுகிருள். அல்லலுறுமபோது அரவணைக்கிருள். ஆபத்தில் இருக்கும்போது அபயமளிக்கிருள். விசேடமாக மரணவேளையில் உதவிபுரிந்து ஆன்மாக்களைப் பரலோகத்துக்கு அழைத்துச் செல்கின்ருள். இம்மாதம் மரியாளின் மாதமல்லவா? இம் மாதத்தில் அவளுக்கு மிகவும் பிரியமான செபமாலையைப் பயபக்தியோடு ஓதி, முக்தி இன்பத்தை அடைய ஆசிப்போமாக! வாழ்க நேசத் தாயே! பரலோகத்தையும், பூலோகத்தையும் ஆளுகின்ற அரசனை [illegible]

### வாழ்க எம் தாயே!

வானத்து விண் மீனே!
வானவர் திரவியமே!
வாழ்க எம் தாயே!
வளர்க நம் பெயரே!

*

அடைக்கலமே அன்பே!
அண்டி வந்தோம் தாயே!
அமலனின் அன்னையே!
அருள் புரிவாய் நீயே!

*

பாரினில் நாமே!
பவம் புரிந்தோமே!
படுந்துயர் தாங்காதே!
பரதவிக்கின்ருேமே!

*

கருணையான விழியாலே!
கணப் போது பாராயோ!
கல்லான எம் மனமே!
கசிந்திடச் செய்யாயோ!

✠

**அந்தோனி சிறில்**
(தலைமை ஆசிரியர்) அவர்கள்
அமரத்துவமடைந்த

**1-ம் வருட ஞாபகம்**

தோற்றம்: 18-3-1909. மறைவு: 8-5-1969.

மண்ணில் மறைந்தாலும் எம் மனக்கண்ணில் நின்று என்றுமே நீங்காத எனது அருமைக் கணவரும், றெஜினு, திரேசா, றீற்று, பேர்ணுட், பெஞ்சமின், மத்தியூஸ், சாந்தி ஆகியோரது அன்புத் தந்தையுமாகிய அந்தோனி சிறில் அவர்கள் இறைவனடி சேர்ந்த 1-ம் வருடம் 8-5-70-ல் பூர்த்தியாகின்றது. இதனைக் கண்ணுறும் விசுவாசிகள் யாவரும் இவரின் ஆத்தும இளைப்பாற்றிக்காகவேண்டிக்கொள்ளுமாறு தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிருேம்.

இவரைஇழந்து துயருறும்:
மனைவியும், பிள்ளைகளும்.
நவாலி தெற்கு, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

**வைகாசி —1970**

| | | | |
|---|---|---|---|
| 3. | ஞாயிறு | பாஸ்கா 6-ம் ஞாயிறு | [வெ] |
| 4. | திங்கள் | புனித மொனிக்கா | [வெ] |
| 5. | செவ்வாய் | தினப்பூசை | [வெ] |
| 6. | புதன் | ” | [வெ] |
| 7. | வியாழன் | ஆண்டவரின் ஆரோகணம் | [வெ] |
| 8. | வெள்ளி | வரப்பிரசாத மாதா | [வெ] |
| 9. | சனி | புனித கிறகோரி | [வெ] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# தொழிலுலகம்

தொழிலாளர் உலகம் மே மாதம் முதலாம் தேதியைத் தனக்கேயுரிய தினமாக நீண்ட காலமாகக் கொண்டாடி வந்திருக்கின்றது. அன்று நடைபெறும் ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் அவர்கள் ஒன்று கூடுவதற்கும், தமது உரிமைகளையுணர்ந்து முன்னேற்றம் அடைவதற்கும் உதவுகின்றன. தொழிற் சங்கங்கள் அநேகமாக அரசியற் கட்சிகளின் ஆதரவிலேயே இயங்கி வருகின்றபடியால் அக்கட்சிகள் தொழிலாளர் நலன்களைப் பாதுகாப்பதில் ஒன்றோடொன்று போட்டியிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

எம் நாட்டில் தொழிலாளர் நிலைமை படுமோசமாக இல்லாவிட்டாலும் திருப்திகரமாக இருக்கிறதென்றும் சொல்ல முடியாது. பொருள்களைக் கொள்வனவு செய்வதுபோல் குறைந்த ஊதியத்துக்குக் கூடுதலான உழைப்பைப் பெறுவதுதான் தொழிலதிபர்களின் நோக்கமாக இருக்கிறது.

தொழிலின் மகத்துவத்துக்கு உரிய மதிப்புக் கொடுக்கப்படாதபோது தொழிலாளியும் தனது உழைப்பைக் கடைச்சரக்காக, ஆகக்கூடிய பணத்துக்கு விலைப்படுத்த வேண்டிய ஒன்றாகக் கருத நேரிடுகின்றது. மனித உழைப்பு கடைச்சரக்கன்று. பொருள் தேடும் ஒரே குறிக்கோளை மட்டும் கொண்டதன்று. வேலைக்குத் தகுந்த கூலி அவசியம்தான். ஆனால் அத்துடன் அது நின்று விடுவதில்லை. உழைப்பு மனிதனுக்கு உடல் நலனையும், ஆன்ம திருப்தியையும் கொடுக்கின்றது. ஒரு கத்தோலிக்கனுக்கோவெனில், அது இன்னும் ஒருபடி மேலே சென்று, அவனது அப்போஸ்தலத்துவமாகவும் விளங்குகின்றது. தனது ஆன்ம ஈடேற்றத்துக்கும், பிறரது நலத்துக்கும் உழைக்க அது ஒரு சாதனம்.

ஆனால், எத்தொழிலில் ஈடுபட்டுள்ளோரும் அதற்குரிய மதிப்பும், ஊதியமும் பெற முடியாவிட்டால், தமது கடமையை நிறைவேற்றுவதில் திருப்தியும், தாம் ஆற்றும் சேவையையிட்டுப் பெருமையும் கொள்வார்களென எதிர்பார்க்க முடியாது. அவர்கள் மனதில் மனக்கசப்பும், வெறுப்புமே இடம்பெறும்.

ஆகவே, பாப்பரசர்களும், பிறரும் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளபடி தொழிலாளருடைய அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். தொழிலதிபர்கள் தம் கீழ்ப் பணியாற்றும் சகல தொழிலாளர்களுக்கும் போதிய வருமானம், ஓய்வு, வாழ்க்கை வசதிகள் கிட்டும்படி செய்தல் வேண்டும். ஆனால் அதுமட்டும் போதியதன்று. மேலதிகாரிகளுக்கும், தொழிலாளருக்குமிடையே பரஸ்பர நல்லுறவை வளர்ப்பதற்கு ஏற்ற வழிவகைகளைக் கையாளுதல் வேண்டும். தங்கள் மேலதிகாரிகளும், முதலாளிகளும் இதயமுள்ள மனிதர்தான் என்ற என்ற உணர்வு தொழிலாளரிடத்தில் எங்கு காணப்படுகின்றதோ அதுவே தொழிற்துறையில் காணப்படவேண்டிய ஆதர்ச நிலையாகும். அத்தகைய நிலை ஏற்படுவதற்குக் கத்தோலிக்க முதலாளிகள் வழிகாட்டுவார்களாக.

# கடன் தினம்

## 7-5-70 வியாழக்கிழமை

**கர்த்தரின் ஆரோகணத் திருநாள்**

# அவர்கள் பார்த்துக்கொண்டிருக்க உயர எழுந்தருளினர் அப்பொழுது ஒரு மேகம்வந்து அவர்களுடைய கண்களுக்கு அவரைமறைத்தது

**(அப். நடபடி 1ஆம் அதி. 9ஆம் வசனம்)**

மனிதரின் இரட்சணியமே தமது ஏக நோக்கமாகக் கொண்ட நம் அன்பின் மீட்பர் மரித்து உயிர்த்தெழுந்தபின் நாற்பது நாட்களாக அடிக்கடி தமது அப்போஸ்தலருக்குத் தரிசனையாகி, சருவேசுரனுடைய இராச்சியம் இம்மண்ணுலகில் தயாரிக்கப்பட வேண்டிய விதத்தைப்பற்றி மீண்டும் அவர்களுடன் உரையாடி, அநேகம் திருஷ்டாந்தங்களால் தம்மை உயிரோடிருக்கிறவராக அவர்களுக்கு எண்பித்தார். விசேஷமாக அவர் தமது கடைசித் தரிசனையில் பரி. இராயப்பரை அழைத்து, என்னை நேசிக்கிறாயா என்று மும்முறை விசாரித்து, தேவ சிநேகத்தைப்பற்றி உணரவைத்து, “என் ஆட்டுக் குட்டிகளையும் ஆடுகளையும் மேய்ப்பாயாக” என்று கூறி, திருச்சபையின் தலைவராக்கினர். ஈற்றில் அவர் பரலோகத்துக்கு எழுந்தருளும் தருணம் வந்தபோது அப்போஸ்தலர்களை அழைத்து, பரிசுத்த ஆவியைப் பெறும் பொருட்டுக் காத்திருந்து ஜெபிக்கும்படி கட்டளையிட்டு, பரிசுத்தஆவியைப் பெற்றபின் அவரின் வல்லமையால் பூமியின் கடைசி எல்லைமட்டும் எனக்குச் சாட்சிகளாயிருங்கள்” என்று கூறி, அவர்களை ஆசீர்வதித்து, (அப். நடபடி 1.ம் அதி. 9–11-ம் வச.) அவர்கள் பார்த்துக் கொண்டிருக்க, உயர எழுந்தருளினர். அப்பொழுது ஒரு மேகம் வந்து அவர்களுடைய கண்களுக்கு அவரை மறைத்தது. அவர் பரலோகத்துக்கு எழுந்து போவதை அவர்கள் கூர்ந்து பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ வெண்ணுடை அணிந்த இருவர் அவர்கள் அருகே நின்று, கலிலேய மனிதரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்? உங்களிடத்திலிருந்து பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட யேசுநாதர் எப்படி எழுந்தருளிப் போனாரோ, அப்படியே திரும்பவும் வருவார்” என்றார்கள். அதன்பிறகு அப்போஸ்தலர் ஒலிவமலையில் நின்றும் வந்து, பிதாவின் வாக்குத்தத்தமாகிய பரிசுத்த ஆவியானவரின் வருகைக்காகக் காத்திருந்து ஜெபித்தார்கள்.

இவ்வாறு யேசுநாதரின் ஆரோகணம் அவராலும், அவர் தூதராலும் கூறப்பட்டபடி, உலகமுடிவில் அவரது இரண்டாவது வருகையாக, நடுத்தீர்ப்பவராக வருவார் என்பதை நமக்கு அறியவைக்கிறது. இது விசுவாச சத்தியங்களில் ஒன்று. யேசுநாதரின் முதலாம் வருகையாகிய பிறப்பை மக்கள் யாவரும் காலாகாலமாகக் காத்திருந்து மன்றாடி, அன்பின் கொடையாக, இரக்கத்தின் தேவனாக, அருளின் தெய்வமாக, சமாதானப் பிரபுவாக, பலியாகும் செம்மறியாகக் கண்டடைந்தனர். பெத்தலேகேம் மாட்டுத் தொழுவத்தில், நசரேத்தூரில், யூதேயா நாட்டில் எருசலேம் தேவாலயத்தில், கல்வாரிமலையில் காணும் பாக்கியம் பெற்றனர். கடைசியாகக் கல்லறையருகில், வழிப்பயணத்தில், கடற்கரையருகில் அழைக்கப்பட்டோர், அன்பு செய்யப்பட்டோர் மத்தியில் உத்தானத்தின் தெய்வமாகத் தரிசனைகொடுத்தார்.

கடைசியாக அவரது ஆரோகணத்தின்பின்போ, பரலோகத்தில் பரிந்துபேசுபவராகவும், பூலோகத்தில் மக்களின் ஆன்ம போசனமாகவும், வாழ்ந்துகொண்டிருக்கிறார். ஆயின் அவரது இரண்டாம் வருகையோ, அவரது அன்பு எல்லாம் ஒன்றுசேர்ந்து, நீதியின் தேவனாக, நடுத்தீர்க்கும் அரசராக, வான மண்டலங்களிலே, சகல வல்லபங்களோடும், மகிமையோடும் தேலதூதர் புடைசூழ வருவார். அப்போது வானத்தின் சத்துவங்கள், கட்டவிழ்க்கப்பட்டு, சூரியன் இருண்டு, சந்திரன் இரத்தநிறமாகமாறி யாவும் நிலைகுலையும். அப்போது அவர் ஏழை ரூபமெடுக்கப் போவதுமில்லை, புதுமைசெய்து போதிக்கப் போவதும் இல்லை. பலி ஒப்புக்கொடுத்து பிதாவுடன் பரிந்துபேசப்போவதும் இல்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

# பாஸ்கா விழாவின் 6ஆம் ஞாயிறு

**முன்னுரை :**

நமது ஆண்டவர் தமது பிதாவிடம் திரும்பிப் போவதைக் குறித்து இறுதி இராவுணவின்போது தம் அப்போஸ்தலர்க்குக் கூறிய மொழிகளில் சில கடந்த இரண்டு ஞாயிறுகளிலும் எடுத்துரைக்கப்பட்டன. இன்றும் “நான் பிதாவிடம் நின்று புறப்பட்டு உலகுக்கு வந்தேன். மறுபடியும் உலகத்தைவிட்டுப் பிதாவிடம் போகிறேன்” என்னும் வாக்கு ஒலிக்கிறது. இவ்வாக்குகள் நம் மீட்பருடைய பாஸ்காவை அதாவது அவர் இவ்வுலகிலிருந்து பிதாவிடம் கடந்துபோவதை உணர்த்துகின்றன.

இந்தக் கடத்தலை மனதில் கொண்டு நாமும் அவரோடு இணைந்தவர்களாய் அவருடைய தந்தையும் நம்முடைய தந்தையுமாகிய பரலோக தந்தையிடம் செல்வதில் முழு உள்ளத்துடன் ஆவல்கொண்டிருக்க வேண்டும் என்பதை இவ்வாக்குகளும் மற்ற வாசகங்களும் நமக்கு நினைவூட்டுகின்றன. மூன்றாம் ஞாயிறில் நம் மீட்பரோடு, பரலோக தந்தையிடம் செல்லவேண்டிய நாம் துன்பப்பட்டாக வேண்டும் என்றும், துன்பத்தை மேற்கொள்வதும் அதை இன்பமாக மாற்றுவதும், துன்பத்தில் பொறுமையாக இருப்பதும் இயல்பிலே எளிதானதன்று. நம்மைத் தேற்றுபவரான பரிசுத்த ஆவியால் மட்டுமே அதை நம்மிடத்தில் செயல்படுத்த முடியும் என்பதை நான்காம ஞாயிறும் எமக்குஉணர்த்தியது. இன்று கிறிஸ்தவ வாழ்வுக்கு இன்றியமையாதது செப வாழ்வு. கிறிஸ்து மீட்பரின் பெயரால் பரமபிதாவை எந்த நேரமும் செபித்தவண்ணமாக வாழ நாம் முயலவேண்டும் என்ற கருத்து நமக்கு வலியுறுத்தப்படுகின்றது. இவ்வாறு நாம் செபித்தால் கொஞ்சம் கொஞ்சமாக இவ்வுலக ஆசையினின்றும், பாவத்தினின்றும் விடுதலை பெற்றுக் கிறிஸ்துவோடு பரலோக பிதாவிடம் செல்ல முடியும். இதுவே நம்முடைய பாஸ்கா. இந்த நாளுக்காக நாம் நம்மைத் தயாரிப்போம்.

**சபை மன்றாட்டு :**

கடவுளின் விருப்பப்படி நாம் பரலோக வாழ்வை அடைய நமக்கு உதவியாக இருப்பவற்றைச்செய்ய அருள் தரும்படி இறைஞ்சுவோமாக.

**நிருபம் :**

போதனைகளைக் கேட்டால் மட்டும் போதாது, பிறருக்கு உதவிசெய்தல் ஏழைகளைப் பராமரித்தல் போன்ற நல்ல கிரிகைகளைச் செய்யவேண்டும். அத்துடன் கூடிய செபமே பிதாவிடம் செல்ல வழிவகுக்கும் என்று புனித யாகப்பர் அறிவுறுத்துகிறார்.

**நற்செய்தி :**

பிதாவிடம் செல்ல செபம் எவ்வளவு இன்றியமையாதது என்றும், ஆண்டவருக்கும் நமக்குமுள்ள ஐக்கியத்தையும் இன்றைய நற்செய்திவழியாக ஆண்டவர் எடுத்துரைக்கிறார்.

**காணிக்கை மன்றாட்டு:**

நாம் செய்யும் செயலகள் பரம தந்தையிடம் செல்ல நம்மைத் தகுதியுடையவர்களாக்கும்படி ஆண்டவரை மன்றாடுவோமாக.

**திருவிருந்து :**

திருவிருந்துஅருந்திய நாம் சரியானவைகளை விரும்பவும் செய்யவும் ஆண்டவரை வேண்டுவோமாக.

— கி. பங்கிராஸ்,
மறை ஆசிரியர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970ஆம் ஆ வைகாசிமீ 2ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி : “கதலிக் பிறஸ்” யாழ்ப்பாணம். தொலைபேசி : 300 தாபிதம் 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org